**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**O.S.No.434/2016** நாள்: 28.11.2019

**<u>வா.சா.2, மணியம்மாள், குறுக்கு விசாரணை 2 ம் பிரதிவாதி தரப்பில்</u>**

என் அப்பா பெயர் சின்ன கருப்பன். என் அம்மா பெயர் பொம்மி. என் அம்மாவின் ஊர் ராயர்பாளையம். என் உடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து 3 பெண் மக்கள், ஒரு மகன். என் அம்மா இறந்தபிறகு என் அப்பா இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். பின்னர் என் அம்மாவின் அம்மாதான் ராயர்பாளையத்தில் வைத்து எங்களை கவனித்து கொண்டார். ராயர்பாளையத்தில் இருக்கும்போது சின்னப்பன் என்பவருடன் எனக்கு திருமணம் நடந்தது. திருமணம் செய்து வைத்தது என் அம்மாவின் அம்மாதான். சுமார் 20 வருடங்கள் நாங்கள் ராயர்பாளையத்தில் வசித்து வந்தோம். ஆட்டையாம்பாளையத்தில் சுமார் 6, 7 வருடங்கள் இருந்தோம். கந்தம்பாளையத்திற்கு வந்து சுமார் 10, 12 வருடங்கள்தான் இருக்கும் என்றால் சரியல்ல. குழந்தைகளையும் அழைத்து வந்து கந்தம்பாளையத்திற்கு சுமார் 45 ஆண்டுகள் இருக்கும். 45 வருடமாக கந்தம்பாளையத்தில் வசிக்கிறேன் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்யமுடியும். இதுவரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாவித்ரியின் கணவர் நடராஜன் என்பவர் என்னுடைய 2 வது அக்காவின் மகனாவார். அம்மாசைவளையனை நான் பார்த்தது இல்லை. அவருக்கு ரங்கவளையன், பாட்டவளையன் ஆகிய இரண்டு மகன்கள் என்றால் சரிதான். ரங்கவளையனுக்கு இரண்டு மகன்கள். அதில் முதலாவது மகனின் பெயர் அஷ்குசன், இரண்டாவது மகனின் பெயர் முருகன் ஆகும். பாட்டவளையனுக்கு சிந்த கருப்பன், முதலி கருப்பன் என இரண்டு மகன்கள் உள்ளனர். பாட்டவளையன், ரங்கவளையன் ஆகியோர்கள் நான் 10 வயதாக இருந்தபோது அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள். அவர்களுக்கு திருமணம் முடிந்து தனித்தனி குடும்பமாக இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் சொத்துக்களை யார்யாரிடம் இருந்து எப்போது வாங்கினார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட பூமியாகும். அரசாங்கத்தில் எப்போது கொடுத்தார்கள் என்பது எனக்கு தெரியாது. அவர்கள் பத்திரங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நாகம்மாள் என்பவர் முதலி கருப்பனின் மனைவியாவார். அவர் என்னுடைய பக்கத்து வீட்டை சார்ந்தவர். சரஸ்வதி

என்பவர் என்னுடைய மருமகள். பழனாள் என்பது யார் என்றால் தெரியாது. நாகம்மாளுக்கும் எனக்கும் தகராறு வந்து அவிநாசி காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. 18.04.2004 தேதியில் வீட்டு புறவடை தகராறு தொடர்பாக நாகம்மாள் எக்ஙள் மூன்று பேர் பெயரிலும் புகார் கொடுத்து என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல. நாகம்மாள் எந்த வருடம் இறந்தார் என்றால் சுமார் 10 வருடம் இருக்கும். சாவித்ரியை மூலகுரும்பாளையத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள். முதலிகருப்பன் எப்போது இறந்தார் என்றால் சுமார் 10, 15 ஆண்டுகள் இருக்கும். அவர் சொத்து சம்பந்தமான பத்திரங்களை நான் பார்த்தது இல்லை. முத்துசாமிக்கு 2 மனைவிகள். முத்துசாமி சிறுவயதில் இருந்து அவருடைய தகப்பனாருடன் இல்லை என்றால் சரியல்ல. அவருடன் தான் இருந்தார். நான் அவ்வாறு பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மல்லிகா என்பவர் கந்தம்பாளையத்தில் இருந்தார். முத்துசாமி, முதலிகருப்பன், நாகம்மாள் ஆகியோர்களுக்கு உடல்நிலை சரியில்லை என பொய்யாக கூறுகிறேன் என்றா சரியல்ல. சொத்துக்கள் முழுவதும் முதலிகருப்பன் சம்பாதித்து வாங்கிய சொத்துக்கள் என்றால் சரியல்ல. அந்த பூமிகளில் எவ்வளவு பூமிகளை விற்றுவிட்டார் என்றால் முதலிகருப்பன் விற்கவில்லை. எங்கள் ஊரில் ரங்கா நகர் என்கிற இடம் உள்ளது. அந்த பூமிகளை முதலிகருப்பன் விற்றாரா என்றால் தெரியாது. சாட்சி தற்போது மாற்றி அவர் விற்கவில்லை என கூறுகிறார். பூர்வீக சொத்து எதுவும் இல்லை என்றம் அதில இருந்து வந்த வருமானத்தை கொண்டு தாவா சொத்துக்கள் முதலி கருப்பனால் கிரையம் பெறப்பட்டது என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சாவித்ரி என்பவர் என்னுடைய அக்கா மருமகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி குடும்பத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

ஒப்பம்.மணியம்மாள்

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the pleader and admitted by the witness to be correct.*

-Sd-S.Prabha Chandran-
Sub Judge,
*Avinashi.*